அரச நிர்வாக சுற்றறிக்கை கடிதங்கள்: 03/2013

எனது இலக்கம் : EST-7/LEAVE/03/3183
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07
2013.08.27

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்
மற்றும் திணைக்களத் தலைவர்கள்

**குழந்தயை பிரசவித்த பின்னர் அரச சேவையில் நிரந்தர நியமனங்களைப் பெற்றுக்கொள்ளும் புதிய அலுவலர்களுக்கு அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 04/2005 இற்கமைய பிரசவ விடுமுறையினை வழங்கல்**

அரச நியமனம் ஒன்றினைப் பெறுவதற்கு முன்னர் குழந்தையைப் பிரசவித்துள்ள அலுவலர் ஒருவர்,அரச சேவையில் புதிய நியமனம் ஒன்றைப் பொறுப்பேற்றதன் பின்னர் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 04/2005 இன் ஏற்பாடுகளுக்கமைய பிரசவ விடுமுறையினை வழங்கும்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக பல்வேறு கேள்விகள் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் கீழ்வருமாறு செயற்படுதல் வேண்டும்.

02. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2005 இன் ஏற்பாடுகளுக்கமைய அரச பெண் அலுவலர் ஒருவருக்கு பிரசவ விடுமுறையினை வழங்குவது குழந்தையின் போசனை மற்றும் பாதுகாப்புக்காக வேண்டியாகும். ஆதலால் பிரசவ தினம் தொடக்கம் அலுவலர் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்ட திகதி வரையான காலப்பகுதிக்குரிய நாட்களின் எண்ணிக்கையை அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2005 இன் ஏற்பாடுகளுக்கமைய சம்பளத்துடன் பெற்றுக்கொடுக்கப்படும் 84 நாட்கள் பிரசவ விடுமுறைக் காலப்பகுதியிலிருந்து குறைத்து எஞ்சிய காலப் பகுதியை மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி சம்பளத்துடனான விடுமுறையாக வழங்கப்பட முடியும்.

03. மேலே குறிப்பிடப்பட்ட வகையில் கணிக்கப்பட்டதன் பின்னர் அலுவலருக்கு உரித்தாவது அரைச் சம்பள அல்லது சம்பளமற்ற விடுமுறையாயின் மேற்படி விடுமுறையினையும் அலுவலரின் கோரிக்கைக்கமைய வழங்க முடியும்.

04. குழந்தைப் பிரசவத்தின் பின்னர் அரச சேவைக்குப் புதிய நியமனங்களைப் பெற்று, இதுவரை அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 04/2005 இற்கமைய சம்பளத்துடனான, அரைச் சம்பள மற்றும் சம்பளமற்ற விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய கால எல்லையைத் தாண்டாத அலுவலர் ஒருவர் தொடர்பில் மேற்படி ஆலோசனைகளுக்குப் புறம்பான வகையில் வழங்கப்பட்டுள்ள விடுமுறைகளை தேவையான சீராக்கல்களை மேற்கொண்டு திருத்தம் செய்யப்படலாம் என்பதனையும் மேலும் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்.பி.பீ.அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு